**Ullatchi Murasu 23rd September 2020**

# செய்தி ஓட்டங்கள்...

## மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிறுவனம் பொது நுழைவு



**சென்னை, செப்.23-**

சென்னை முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோருக்கான தேசிய நிறுவனம் (**NIEPMD**) மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத்துறை சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம் இந்திய அரசின் கீழ் இயங்கி வரும் தேசிய நிறுவனம் ஆகும்.

இந்நிறுவனத்தில் இளநிலை இயன்முறை பயிற்சி (**BPT**), இளநிலை செயல் முறை சிகிச்சை (**BOT**), இளநிலை செயற்கை அவயங்கள் செய்வதற்கான (**BPO**), முதுநிலை இயன் முறை பயிற்சி (**MPT**), முதுநிலை செயல் வழி முறை சிகிச்சை (**MOT**) மற்றும் முதுநிலை செயற்கை அவயங்கள் செய்வற்கான (**BPO**) பற்றிய படிப்பிற்கான பொது நுழைவு தேர்வு 20.09.2020 அன்று நடைபெற்றது.

இந்த தேர்வானது நடப்பது கோவிட் 19 தொற்று உள்ள காலமானதால் அதற்கு உண்டான பாதுகாப்பு அம்சங்களான சமூக இடைவெளியை கடைபிடித்தல், முககவசம் அணிதல், கைகளை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்தல் போன்ற பாதுகாப்பு அம்சங்களை கடைபிடித்து தேர்வானது நடத்தப்பட்டது. இந்த தேர்வில் தமிழகம் முழுவதிலும் இருந்து சுமார் 150க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.